# கர்ப்பகாலத்தின் பிற்பகுதியில் தொப்புள்க் கொடி வெளித்தள்ளல் பற்றி உங்களுக்குத் தெரியுமா ?

## (Umbilical cord prolapse)



Dasanayake D L W[1] , Marleen F S[2] , Dodampahala S H[3]
*on behalf of the Sri Lanka College of Obstetricians & Gynaecologists*

*1-Professor of Obstetrics & Gynaecology, Chair Professor, Dept. of Obstetrics & Gynaecology, Faculty of Medicine, University of Ruhuna*
*2-Consultant Obstetrician & Gynaecologist, Sri JayawardenapuraGeneral Hospital*
*3-Professor in Obstetrics & Gynaecology, Faculty of Medicine, University of Colombo*

*Correspondence –Sri Lanka College of Obstetricians & Gynaecologists, No.112, Model farm road, Colombo 08   Email - slcogoffice@gmail.com*

எனக்கு 30 வயதாகிறது. நான் ஒரு கர்ப்பிணித் தாய், எனக்கு இப்போது 36 கர்ப்பவாரங்கள். இது எனது இரண்டாவது கர்ப்பமாகும் . என் வயிறு பெரிதாகத் தெரிகிறது. கருப்பையினுள் சிசுவைச் சூழ நீர் கொஞ்சம் அதிகமாக இருப்பதாக மருத்துவர்கள் கூறுகிறார்கள். எனக்கு தொப்புள்க்கொடி வெளித்தள்ளும் ஆபத்து இருப்பதாகவும் கூறப்பட்டது.தொப்புள் கொடி வெளிதள்ளல் என்றால் என்ன ? அதை எப்படித் தடுப்பது? எனக்கு அதைப் பற்றிய கூடுதல் விவரங்கள் தேவை



இந்தத் தகவல்த் தாள் தொப்புள்க்கொடி வெளித்தள்ளல் பற்றிய கீழ்க்காணும் தகவல்களை நீங்கள் நன்கு புரிந்துகொள்ள உதவும்

- தொப்புள்க் கொடி வெளித்தள்ளல் ஏன் அவசரநிலை ஆகும் ?

• இது ஊகிக்கக்கூடியதா அல்லது தடுக்கக்கூடியதா?
• தொப்புள்க் கொடி வெளித்தள்ளலை ஏற்படுத்தக்கூடிய பொதுவான காரணிகள் எவை ?
•தொப்புள்க் கொடி வெளித்தள்ளியமைக்கான குணங்குறிகள் எவை ?
• உங்களுக்கு தொப்புள்க் கொடி வெளித்தள்ளியுள்ள நிலைமை ஏற்படுள்ளதாக நீங்கள் நினைத்தால் என்ன செய்ய வேண்டும்?
• இதற்க்கான சிகிச்சைகள் என்ன?
• தொப்புள்க் கொடி வெளித்தள்ளினால் உங்கள் சிசுவிற்கு என்ன நடக்கும்?

**தொப்புள்க் கொடி என்றால் என்ன?**

தொப்புள்க் கொடி என்பது கருவின் தொப்புளை கருப்பையுடன் இணைக்கப்பட்ட நஞ்சுக்கொடியுடன் இணைக்கும் ஒரு அமைப்பாகும்.இதில் ஆக்ஸிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்களை எடுத்துச் செல்லும் இரத்த நாளங்கள் மற்றும் கழிவு பொருட்களை கொண்டு செல்லும் இரத்த நாடிகள் உள்ளன.
குழந்தை பிறந்த பிறகு, நஞ்சுக்கொடியை அகற்றுவதற்கு முன்பு குழந்தையிலிருந்து தொப்புள் கொடி வெட்டப்படுகிறது


**தொப்புள்க் கொடி வெளித்தள்ளல் என்றால் என்ன?**

கருப்பையின் உள்ளே இருக்கும் மிக மெல்லிய அம்னோடிக் சவ்வு உடைந்த பிறகு, திறந்தநிலையில் இருக்கும் கருப்பைக் கழுத்தின் ஊடாகச் சிசு பிரசவமாக முன், தொப்புள்க் கொடி வெளியேவரும் நிலை தொப்புள்க் கொடி வெளித்தள்ளல் எனப்படும்.


*Correspondence –Sri Lanka College of Obstetricians & Gynaecologists, No.112, Model farm road, Colombo 08 Email - slcogoffice@gmail.com*

இது பொதுவாகப் பிரசவத்தின் போது நிகழ்கிறது, ஆனால் பிரசவம் தொடங்கும் முன் அம்னியோடிக் சவ்வு சிதைந்தாலும்(பன்னீர் குடம் உடைவதாலும்) ஏற்படலாம்.

- தொப்புள்க் கொடி வெளித்தள்ளல் அசாதாரணமானது, இது 200 இல் 1 முதல் 1,000 இல் 1 வரையான பிறப்புகளில் நிகழ்கிறது.
- இது பொதுவாகக் கர்ப்பகாலத்தின் முடிவில் (37 வாரங்களுக்குப் பிறகு) நிகழ்கிறது.



Normal position of the umbilical cord



Umbilical cord prolapse

**தொப்புள்க் கொடி வெளித்தள்ளும் ஆபத்தை ஆரம்பத்திலேயே கண்டறிய முடியுமா?**

அதை முன்கூட்டியே அறிய முடியாது. கர்ப்ப காலத்தில் தொப்புள்க் கொடி மற்றும் குழந்தையின் நிலை மாறுவதால், அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் மூலம் எந்தப் பெண்களுக்கு தொப்புள்க் கொடி வெளித்தள்ளும் அபாயம் உள்ளது என்பதைக் கணிக்க முடியாது.

*Correspondence –Sri Lanka College of Obstetricians & Gynaecologists, No.112, Model farm road, Colombo 08 Email - slcogoffice@gmail.com*

## எச்சந்தர்ப்பத்தில் தொப்புள்க் கொடி வெளித்தள்ளும் வாய்ப்பு அதிகம்?

குழந்தையின் தலை கீழ் இறங்கித் தாயின் இடுப்பு எலும்புக்கூட்டை முழுவதுமாக நிரப்பினால், தொப்புள்க் கொடி வெளித்தள்ளல் பொதுவாகச் சாத்தியமற்றது. இருப்பினும், குழந்தை போதுமானளவு கீழிறங்காத சந்தர்ப்பத்தில் தொப்புள்க் கொடி நழுவி, குழந்தையின் தலை மற்றும் தாயின் இடுப்பு எலும்புக்கூட்டுக்கு இடையில் உள்ள இடைவெளி வழியாக வெளியேறலாம்

## தொப்புள்க் கொடி வெளித்தள்ளல் ஏற்பட ஏதுவான காரணிகள்

- கருவின் தலை கீழ்ப் புறமாக இல்லாத போது, அதாவது பிட்டம் கீழே இருக்கும் போது (ப்ரீச்) அல்லது சிசு குறுக்காக இருக்கும் போது
- பிரசவத்திற்கு முன் அல்லது குறைமாதப் பிரசவத்தில் அமினியோடிக் சவ்வு சிதைதல்
- ஒன்றுக்கு மேற்பட்ட சிசுக்களைக் கருத்தரித்திருத்தல் (இரட்டையர்கள் அல்லது மூன்றுசிசுக்கள் போன்றவை)
- சிசுவைச் சுற்றி அதிக அம்னோடிக் திரவம் இருப்பது (பாலிஹைட்ராம்னியோஸ்)
- சிசுவின் நிறை குறைவாக இருத்தல்
- நஞ்சுக்கொடி கருப்பையின் அடிப்பகுதியில் அமைந்திருத்தல்
- சிசுவின் தலை தாயின் இடுப்பு எலும்புக் கூட்டுக்குள் இறங்க முன் பிரசவத்தை இலகு படுத்தும் நோக்கில் மருத்துவரால் அமினியோடிக் சவ்வு செயற்கையாக சிதைக்கப்படல்.

இந்தக் காரணிகளில் ஏதேனும் ஒன்றை உங்கள் மருத்துவர் சந்தேகித்தால், அவர் உங்களுக்கு முழு விபரங்களையும் தருவார்.

**இது ஏன் அவசரநிலையாகும் ?**

தொப்புள்க்கொடி வெளித்தள்ளிய பின் சிசுவின் உடற்பாகங்களினாலும் அல்லது கருப்பைச் சுருக்கத்தின் போதும் தொப்புள்க் கொடி நசிவடையும் . இது தொப்புள்க் கொடியின் வழியாகச் செல்லும் இரத்தத்தின் அளவை முற்றிலும் அல்லது கணிசமாகக் குறைக்கும். இதனால் சிசுவுக்கு ஆக்ஸிஜன் வழங்கல் குறைகிறது. இது சிசுவின் மூளைக்குப் பாதிப்பை ஏற்படுத்தும். பாரதூரமான சந்தர்ப்பத்தில் வயிற்றில் இருக்கும் சிசு குறுகிய காலத்துக்குள் இறந்துவிடும். இதனால்,கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இது மிகவும் அவசரமான சூழ்நிலையாகக் கருதப்பட்டு உடனடியாகக் குழந்தை பிரசவிக்கப்படவேண்டும்

.

**தொப்புள்க் கொடி வெளித்தள்ளலை தடுக்க முடியுமா ?**

தொப்புள்க் கொடிவெளித்தள்ளலை தவிர்க்க முடியாது. இருப்பினும், உங்களுக்கு தொப்புள்க்கொடி வெளித்தள்ளும் ஆபத்து அதிகம் இருந்தால், நீங்கள் மருத்துவமனையில் அனுமதிக்கபடலாம். பின்னர் அம்னியோட்டிக் சவ்வு சிதைவடைந்தாலோ அல்லது தாய்க்குப் பிரசவவலி ஏற்பட்டாலோ உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம்.
உங்கள் சிசு குறுக்காக இருந்தாலோ அல்லது சிசு அடிக்கடி நிலை மாறினாலோ, 37 கர்ப்ப வாரங்களில் இருந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்படுமாறு உங்கள் மருத்துவர் உங்களுக்கு அறிவுறுத்தலாம் ஏனென்றால், இந்தக் காலகட்டத்திற்குப் பிறகு குழந்தை பிறக்கும் வாய்ப்பு அதிகம்.

**தொப்புள்க் கொடி வெளித்தள்ளி இருப்பதற்கான அறிகுறிகள் எவை ?**

- யோனியுள் ஏதோ ஒன்று (தொப்புள்க் கொடி) இருப்பது போன்ற உணர்வு.
- யோனியிலிருந்து வெளித்தள்ளிக்கொண்டு இருக்கும் தொப்புள்க் கொடியைப் பார்த்தல்
- மருத்துவர் அல்லது குடும்ப நலப் பணியாளர் உங்கள் யோனியின் உள்ளே தொப்புள்க் கொடியைப் பார்த்தல் அல்லது உணர்தல்.
- அமினியோடிக் சவ்வு உடைந்த உடனேயே குழந்தையின் இதயத் துடிப்பு குறைதல் (பிராடி கார்டியா). இது தொப்புள்க் கொடி நசுக்கப்பட்டு குழந்தைக்குப் போதுமான ஆக்ஸிஜன் கிடைக்காமையினால் ஏற்படுகிறது .

சில பெண்களுக்கு மேற்கூறிய அறிகுறிகள் எதுவும் தெரிவதில்லை.

**நீங்கள் வீட்டில் அல்லது வேலைத்தளத்தில் இருந்தால் என்ன செய்ய வேண்டும்?**

யோனியுள் தொப்புள்க் கொடியை நீங்கள் உணர்ந்தால் அல்லது பார்க்க முடிந்தால்:

- அவசரகால ஆம்புலன்சுக்கு உடனடியாக 1990ஐ அழைக்கவும்
- நீங்கள் கர்ப்பமாக இருக்கிறீர்கள் என்பதையும் தொப்புள்க்கொடி வெளித்தள்ளி உள்ளதையும் கூறவும் .
- தொப்புள்க் கொடியை மீண்டும் உங்கள் யோனிக்குள் தள்ள முயற்சிக்காதீர்கள்
- உங்களுக்கு அறுவை சிகிச்சை தேவைப்படலாம் என்பதால் எதையும் உண்பதையும் குடிப்பதையும் தவிர்க்கவும்.

தொப்புள்க் கொடி நசுங்குவதைக் குறைக்க, உங்கள் முழங்கால்களையும் முழங்கைகள் மற்றும் கைகளையும் தரையில் ஊன்றி முன்னோக்கி வளைந்து (கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளபடி) இருக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள் . ஆம்புலன்ஸ் அல்லது குடும்ப நலப் பணியாளர் வரும் வரை நீங்கள் இந்த முறையிலேயே இருக்க வேண்டும்.



Knee-chest-face-down position

ஆம்புலன்ஸ் உங்களை அருகிலுள்ள மகப்பேற்று மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லும். ஆம்புலன்சில் பயணிக்கும்போது உங்கள் இடப் பக்கமாகப் படுத்துக் கொள்வது பாதுகாப்பானது.

**அடுத்து என்ன நடக்கும்?**

குழந்தையை விரைவில் பிரசவிக்க வேண்டும் என்பதால், அனேகமாக அவசர சிசேரியன் அறுவை சிகிச்சைக்கு உட்படுத்தப்பட அறிவுறுத்தப்படுவீர்கள். ஆனால் யோனிவழிப்பிரசவம் ஏற்படவும் வாய்ப்புள்ளது . உங்களுக்கான சிறந்த பிரசவ முறையை உங்கள் மருத்துவர் தீர்மானிப்பார்.

தொப்புள்க் கொடி அழுத்தப்படுவதைத் தடுக்க, , மருத்துவர் தாயின் பிறப்புறுப்பில் ஒரு கையை மெதுவாகச் செலுத்தி சிசுவின் தலையை உயர்த்தக்கூடும். சில சந்தர்ப்பங்களில், உங்கள் சிறுநீர்ப்பையை நிரப்ப ஒரு குழாய் செருகப்படுகிறது. இது குழந்தையின் தலையை தொப்புள்க் கொடியிலிருந்து விலக்கி வைத்துத் தொப்புள்க் கொடியில் அழுத்தத்தைக் குறைக்கிறது. முகமூடியின் உதவியுடன் உங்களுக்கு ஆக்ஸிஜன் கொடுக்கப்படலாம் .

**அவசர சிசேரியன் சந்திரசிகிச்சை**

யோனிவழிப் பிரசவத்தைச் சீக்கிரம் செய்ய முடியாவிட்டால், தாய்க்கு அவசர சிசேரியன் செய்ய அறிவுறுத்தப்படுகிறது. அச்சந்தர்ப்பத்தில் குழந்தையை விரைவில் பிரசவிக்கும் பொருட்டு இடுப்புக்குக் கீழ் விறைக்கச்செயும் முறைக்குப் (ஸ்பைனல் அனஸ்தீசியாவிற்குப்) பதிலாக பொது மயக்க மருந்து தரப்படலாம்.

**யோனி வழிப் பிரசவம்**

தாயின் கருப்பை வாய் முழுவதுமாக விரிவடைந்திருந்தால், குழந்தையை விரைவாகப் பிரசவிக்கக்கூடிய சந்தர்ப்பத்தில், சாதாரண பிரசவம் அல்லது உதவிப் பிரசவம் (ஃபோர்செப்ஸ் அல்லது வென்டௌஸ் டெலிவரி) செய்ய முடியும், ஆனால் தொப்புள்க்கொடி வெளித்தள்ளிய சந்தர்ப்பத்தில் சாதாரண பிரசவத்தை விட சீஸரின் பிரசவத்திற்கே அதிக வாய்ப்புள்ளது..

பிறந்த குழந்தையின் நிலையை பரிசோதிக்க ஒரு மருத்துவர் அந்த இடத்தில் பிரசன்னமாகி இருப்பார் .
இந்த நிலை உங்களுக்கும் உங்கள் துணைக்கும் பயத்தை ஏற்படுத்தலாம், ஆனால் மருத்துவர்கள் நிலைமையை உங்களுக்கு விளக்குவார்கள்.

**தொப்புள்க் கொடி வெளித்தள்ளியதனால் என் குழந்தைக்கு என்ன நடக்கக் கூடும் ?**

பெரும்பாலான குழந்தைகளுக்குத், தொப்புள்க் கொடி வெளித்தள்ளியதால் நீண்ட காலப் பாதிப்புக்கள் ஏதும் இல்லை.
இருப்பினும், சிறந்த கவனிப்பு இருந்தாலும் கூட, ஆக்ஸிஜன் பற்றாக்குறை காரணமாக (பிறக்கும் போது மூச்சுத்திணறல்) சில குழந்தைகளில் மூளைப் பாதிப்பு ஏற்படக்கூடும். அரிதாகக் குழந்தை இறக்கக் கூடும் .
உங்கள் குழந்தை பாதிக்கப்பட்டிருந்தால் , அது அவரை எவ்வளவுதூரம் பாதித்திருக்கின்றது என்பதைப் பற்றிய முழுத் தகவல்களையும் மருத்துவர் உங்களுக்குத் தருவார்.
உங்கள் அடுத்த கர்ப்பத்தில் தொப்புள்க் கொடி வெளித்தள்ளும் அபாயம் ஏற்பட வாய்ப்ப மிகக் குறைவு என்பதை நினைவில் கொள்வது அவசியம்.



நன்றி.

Correspondence –Sri Lanka College of Obstetricians & Gynaecologists, No.112, Model farm road, Colombo 08   Email - slcogoffice@gmail.com